**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC .227/2024 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : குணசுந்தரி | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : நடராஜன் | Age | : 54 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 23.07.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி அவர் குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடன்களை அடைப்பதற்காகவும் 12.11.2023 ம் தேதி ரூ.5,00,000/- கடன் பெற்றார். அவர் அதற்காக ஸ்டேட் பாங்க் இந்தியா திருவிடைமருதூர் ரூ. 5,00,000/-க்கான காசோலையை அளித்தார். (**அந்த காசோலை பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள திருவிடைமருதூர் கிளை இந்தியன் வங்கியில் 07.02.204 ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன். (**அதற்கான செலுத்துசீட்டு பு.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) ஆனால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணம் குறிப்பிட்டு 13.02.2024 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பபட்டது. ( **மேற்படி திருப்புதல் குறிப்பாணை பு.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி

திருப்பப்பட்ட விவரம் குறித்து எனக்கு 21.02.2024 ம் தேதி தகவல் தெரிவிக்கப்பட்டது. காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். (**அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பினை 22.02.2024 ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். **(மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி எதிரியின் அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பினை 23.02.2024 ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். ( **எதிரி அலுவலக முகவரியில் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை பு.ச.ஆ 6.ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி எதிரி 26.02.2024 அனுப்பிய பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். ( **மேற்படி பதில் அறிவிப்பு பு.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனவே என்னிடம் கடன் பெற்று வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று கருதப்பட்டு எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**